**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.**

முன்னிலை **திரு.பா.சரவணன், பி.எஸ்.சி., பி.எல்.,**
மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 04 ஆம் நாள் சனிக்கிழமை

**இடைநிலை மனு எண். 1/2025 ல்**
**அசல் வழக்கு எண்.391/2025**

1. K. திருவேங்கடம்,
த/பெ கல்யாணசுந்தரம்பிள்ளை,
எண்.81 மன்னார்பிள்ளை தெரு,
மேலஅடையவளஞ்சான்,
மேலவாசல், ஸ்ரீரங்கம்,
திருச்சிராப்பள்ளி.

2. K. நீலமேகம்,
த/பெ கல்யாணசுந்தரம்பிள்ளை,
எண்.80, மன்னார்பிள்ளை தெரு,
மேலஅடையவளஞ்சான்,
மேலவாசல், ஸ்ரீரங்கம்,
திருச்சிராப்பள்ளி. ... மனுதாரர்கள் /வாதிகள்

/எதிர் /

R. கார்த்திகேயன்,
த/பெ ராஜா,
எண்.1–A நெடுத்தெரு கடைசி,
மேலூர் ரோடு, ஸ்ரீரங்கம்,
திருச்சிராப்பள்ளி. ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது, கடந்த 30.06.2026 அன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு K.பிரபாகர் அவர்களும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு K.S.சங்கர்முரளி அவர்களும், முன்னிலையாகியும், மனுவை நடத்த, மனு,

எதிருரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாத பிரதிவாதங்களை கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்

## உத்தரவு

1) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வகுமுறை 7 விதி 14 மற்றும் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151ன் கீழ் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டு, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மனுவில் கண்டுள்ள கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்வதற்கு அனுமதிக்க உத்தரவிட வேண்டும் என்று கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மனுதாரர்கள் /வாதிகள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், மனுதாரர்கள் அசல் மனுவில் வாதிகள் என்றும், தாவா B அட்டவணை சொத்தினை பிரதிவாதியிடமிருந்து சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி வாதிகளால் அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் உயில் கரூர் வைஸ்யா வங்கியில் கடன் ஈட்டுறுதியாக (MOD) உள்ளதால், அதன் சான்றளிக்கப்பட்ட நகல், மின்சார மற்றும் சொத்து வரி ரசீதுகள், நிலுவையிலுள்ள ஆக்கிரமிப்புகள் குறித்த காவல் புகார் நகல்கள் (FIR 105/2023), புகைப்படங்கள் மற்றும் ஸ்ரீரங்கம் நகர கூட்டுறவு வங்கி ஆவணங்கள் ஆகியவற்றையும், மனுதாரர்களுக்கு மட்டுமே உரிமை உண்டு என்பதை நிலைநாட்டும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின்

ஓ.எஸ்.எண் 204/2020 வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பானை (Decree and Judgment) நகலும் இவற்றுடன், திருச்சி வட்டாட்சியர் மற்றும் நில அளவைத் துறையின் மூலம் செய்யப்பட்ட உட்பிரிவு (Subdivision) விபரங்கள் மற்றும் வழக்கு நிலுவையில் உள்ள காலத்தில் செய்யப்பட்ட அனுமதியற்ற ஆக்கிரமிப்புகளைத் தெளிவாகக் காட்டும் பென்டிரைவ் (Pendrive) புகைப்பட ஆதாரங்களும் சமர்ப்பிக்கப்ட்டுள்ளதாகவும், இந்த ஆவணங்கள் அசல் வழக்கிற்கு முக்கியமான ஆவணங்கள் என்றும், எனவே, மேற்படி ஆவணங்களை கூடுதல் ஆவணங்களாக தாக்கல் செய்ய வேண்டி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே, இந்த மனுவை அனுமதிக்க வேண்டும் என்று வாதிட்டார்.

3) எதிர்மனுதாரர்/ பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், மனுதாரர்கள்/வாதிகள் தங்களது மனுவில் கூறியுள்ள சங்கதிகள் தவறானவை என்றும், இந்த மனு நிலைக்கதக்கதல்ல என்றும், மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு தொடர்புடைய ஆவணங்கள் அல்ல என்றும், குறிப்பாக, 07.05.1986 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணத்தைப் பொறுத்தவரை அந்த உயிலின் நகலை சமர்ப்பிக்க வேண்டுமென்றும், சான்றிட்ட நகலை அல்ல என்றும், ஆவண எண்.36 ஐப் பொறுத்தவரை இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65(B)ஐ பொறுத்தவரை அந்த ஆவணம் அசல் வழக்கிற்கு தொடர்பற்றவையாக இருந்தாலும், அவற்றின்

உண்மைத்தன்மையை நிரூபிப்பதற்கு உட்படுத்தப்பட்டே குறியீடு செய்யப்படலாமென்றும், அசல் வழக்கை இழுத்தடிக்கும் நோக்கத்துடன் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், காலதாமதமாக ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கான காரணம் எதுவும் மனுதாரர்கள் தரப்பில் குறிப்பிடப்படவில்லை என்றும், எனவே, இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

4) இந்த மனுவில் பரிசீலிக்கப்பட வேண்டியது என்னவென்றால் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதாகும்.

5) இருதரப்பு கருத்துகளும், வழக்காவணங்களும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது, தாவா B அட்டவணை சொத்தினை பிரதிவாதியிடமிருந்து மீட்டுத்தரக் கோரி, சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி வாதிகளால் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு வாதிகள் தரப்பு சாட்சிய விசாரணைக்காக 04.11.2025 அன்று வாய்தா போடப்பட்டிருந்த நிலையில், இந்த மனு வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பினை நிரூபணம் செய்ய, இந்த கூடுதல் ஆவணங்களான 1) MOD executed by Kalayanasundram Pillai in favour of Srirangam co-operative urban bank ltd. ,2) Registered Will executed by Kalyanasundaram Pillai in favour of Plaintiffs No. 54/1986 dated 07.05.1986, 3) The receipt issued by SRO for registering the Will dated 07.05.1986. 4) The decree in O.S.No.204/2020 on the file of the District Munsif Court, Srirangam dated 11.01.2021, 5) The judgment in O.S.No.204/2020 on the file of theDistrict Munsif Court, Srirangam dated 11.01.2021, பட்டா மற்றும்

இதர ஆவணங்கள் சேர்த்து 35 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்கள் அசல் வழக்கிற்கு முக்கியமான ஆவணங்கள் என்றும், எனவே, மேற்படி ஆவணங்களை கூடுதல் ஆவணங்களாக தாக்கல் செய்ய வேண்டி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. ஆனால், எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி ஆவணங்கள் இந்த வழக்கிற்கு தேவையற்றவை என்று கூறி, மனுவினை தள்ளுபடி செய்யுமாறு கூறப்பட்டுள்ளது.

6) விசாரணை நீதிமன்றத்தில், இருதரப்பினருக்கும் அவர்களது வழக்கை நிரூபிக்க உரிய வாய்ப்பு வழங்க வேண்டியது அவசியமாகிறது, எனவே, அசல் வழக்கில், மனுதாரர்கள்/வாதிகள் தரப்பை நிரூபணம் செய்ய, அவர்களது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேற்படி கூடுதல் ஆவணங்களை, குறியீடு செய்ய ஒரு வாய்ப்பு வழங்குவதே, நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேற்படி கூடுதல் ஆவணங்களின் உண்மைதன்மை, கட்டுப்படுத்தும் தன்மை தொடர்பாக அசல் வழக்கின் இறுதியில் தான் தீர்மானிக்க முடியும். எனவே, இந்த மனு பின்வரும் நிபந்தனைக்குட்பட்டு அனுமதிக்கத்தக்கதென முடிவு செய்யப்படுகிறது,

7) **முடிவாக,**

இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. மனுவுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களின் உண்மை தன்மை மற்றும் கட்டுப்படுத்தும் தன்மை தொடர்பாக,

அசல் வழக்கின் இறுதியில் தீர்மானிக்கப்படும் என முடிவு செய்து, அவற்றை மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்ய அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்தபின், என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 04 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

SARAVANAN B Digitally signed by SARAVANAN B Date: 2026.07.04 14:03:14 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**

மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : இல்லை.

SARAVANAN B Digitally signed by SARAVANAN B Date: 2026.07.04 14:03:20 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**